සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජසවිබලගැන්වීම්අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல்அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல DSD/HO//05/MF/01<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ..........<br>Your No | දිනය<br>திகதி 2018.09.<br>Date |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் – 2018/11**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்கட்கும்.

**<u>2018 ஒக்டோபர் 01ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்துடன் இணைந்ததாக செயற்படுத்தப்படும் சிறுவர் / சிசுரக்க சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்</u>**

## 1. அறிமுகம்

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வேலைத்திட்டத்தின் சேமிப்பு வைப்புக்களை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு 2018 ஒக்ரோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்துடன் இணைந்ததாக சிசுரக்க / சிறுவர் சேமிப்பு வைப்பு கணக்கு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்

இவ் வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் மற்றும் பரிசில்கள் வழங்கல் தொடர்பான வழிகாட்டல்கள் இத்தால் வழங்கப்படுகின்றது.

## 2. சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

I. சிறுவர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கான சூழலை உருவாக்குதல்

II. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சிசுரக்க / சிறுவர் கணக்குகளுக்கு வைப்புக்களை சேகரித்தல்

III. செயற்படாமல் இருக்கும் சிறுவர் வைப்புக் கணக்குகளை மீளச் செயற்படுத்தி சமுர்த்தி வங்கிகளுடன் அவர்களை தொடர்புபடுத்தல்

## 3. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் செயற்படுத்தும் கால எல்லை

2018 ஒக்ரோபர் 01 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை சேமிப்பு மேம்பாட்டு


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

**4. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் இலக்கு**

**4.1** குறுநிதிப் பிரிவினால் இவ் வேலைத்திட்டத்திற்குரிய நிச்சயிக்கப்பட்ட இலக்குகள் தனித்தனியே ஒவ்வொரு வங்கிகளுக்கும் அல்லது கிராமசேவகர் பிரிவுகளுக்கும் வழங்கப்படமாட்டாது.

**4.2** வங்கி முகாமையாளர் தமது வங்கிக்கும் மற்றும் கிராமசேவகர் பிரிவுக்குமான இலக்குகளை தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும். இதற்கு கீழ்வரும் விடயங்களில் அவதானத்தினை செலுத்தி தனது இலக்கை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

I. வங்கியின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் சிறுவர்களின் சனத்தொகை
II. வங்கியின் அதிகாரப்பிரதேசத்தின் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை
III. நலனுதவி பெறுவோர் உட்பட குறைந்தவருமானம் பெறும் அங்கத்தவர்களின் தொகை
IV. கடந்த ஆண்டுகளில் சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சேகரித்த தொகை (ரூபா)
V. தெரிவுசெய்யப்படும் பரிசுப் பொருட்களின் தன்மை (ரூபா)
VI. செயற்படாத சிறுவர் சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை
VII. போட்டித்தன்மை

**5. பரிசுகள் வழங்கதலும் மற்றும் செலவு செய்தலும்**

**5.1** குறித்து ஒதுக்கப்பட்ட காலத்தினுள் ரூபா 250/= அல்லது அதற்கு கூடிய தொகையினை சேமித்தவர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கமுடியும்.
இங்கு ஒவ்வொரு வங்கியும் சேமிக்கும் மொத்த வைப்புத்தொகையில் அண்ணளவாக 5% க்கு மேற்படாத தொகையினை பரிசுப்பொருட்களுக்காக வங்கி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள முடியும். இச்செலவுகளை மேற்கொள்ளும் போது **செலவுக்கணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கைகள் கணக்கில் பற்று வைக்கவும்.**

**5.2** வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையின் இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யப்படல் வேண்டும். இப்பரிசுப் பொருட்களின் கொள்வனவுகள் நிதி ரீதியான வெளிப்படைத் தன்மை ஏற்படக் கூடிய விதத்தில் பிரதேச பெறுகை நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளல் வேண்டும்.

**5.3** சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பாக சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பாடசாலை மட்டத்தில் தெளிவுபடுத்துவதற்கான துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பெனர் காட்சிப்படுத்தலுக்காக ரூபா 2000/= க்கு மேற்படாத தொகையினை வங்கி நிதியில் இருந்து செலவு செய்துகொள்ள முடியும்.

**6. சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் - 2018 இன் கீழ் சேகரிக்கப்படும் தொகையினை முதலீடு செய்தல்**

6.1. சேகரிக்கப்படும் வைப்புத் தொகையினை வங்கிச் சங்கத்தினூடாக முதலீடு செய்யும் போது இம் முதலீடு பொதுப் பேரேட்டில் தனியாக காண்பிக்கப்பட வேண்டும் என வங்கி முகாமைத்துவ சபை ஆலோசனை வழங்கியுள்ளது.

6.2 வங்கிச் சங்கத்துக்கு முதலீட்டின் பொருட்டு இன் நிதியினை அனுப்பும் போது பொதுப் பேரேட்டில் புதிதாக குறியிட்டு இலக்கம் 3007 இன் கீழ் **“ முதலீட்டின் பொருட்டு வங்கிச் சங்கத்துக்கு அனுப்பிய சிறுவர் / சிசுரக்க நிதியக்கணக்கு”** என்பதில் பதிந்து கொள்ள வேண்டும். இன் நிதியத்தினை வேறாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வங்கிச்சங்கத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

6.3. வங்கிச் சங்கம் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் அனுப்பப்படும் நிதியத்தை இலங்கை வங்கி மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் கூடுதலான வருடாந்த வட்டி விதத்தினை வழங்கும் வங்கியில் முதலீடு செய்தல் வேண்டும்.

6.4. நெறிப்படுத்தல் கையேடு இலக்கம் 02 இன் பந்தி இலக்கம் 3.5.5 இல் குறிப்பிட்டுள்ளவாறு தனியான பதிவேடு ஒன்றினை செயற்படுத்த வேண்டும். மேலும்

அதில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மாதாந்த பரீட்சை மீதிகளையும் சீர்செய்தல் வேண்டும்.

**7. முன்னேற்ற அறிக்கைகள் பெற்றுக் கொள்ளல்**

**7.1** இணைப்பு இலக்கம் 01 இல் உள்ள படிவத்தினைப் பயன்படுத்தி வங்கிகள் 2018.10.31 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிச்சங்கத்துக்கு முன்னேற்ற அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டும்.

இணைப்பு இலக்கம் 02 இல் உள்ள படிவத்தினைப் பயன்படுத்தி 2018.11.07 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையினை தயார் செய்து மாவட்ட சமுர்த்தி காரியாலயத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**7.2** இணைப்பு இலக்கம் 02 இல் மாவட்ட முன்னேற்ற அறிக்கையினை மாவட்ட சமுர்த்தி காரியாலயம் தயார் செய்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் ஒப்பந்தத்துடன் குறுநிதிப் பிரிவுக்கு bank@divineguma.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாக 2018.11.14 ஆம் திகதிக்கு முன்னர கட்டாயமாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜெ. தடல்லகே
பணிப்பாளர் நாயகம்

**பிரதி:-**

01. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு- தகவலுக்காக
02. சகல மாவட்ட செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
03. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும்- தகவலுக்காகவும் .ந.பொருட்டும்
04. சகல பிரதேச செயலாளர்களுக்கும்- தகவலுக்காக
05. பிரதம உள்ளக கணக்காய்வாளர்- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்- தகவலுக்காகவும் உ.ந.பொருட்டும்
06. பிரதிப்பணிப்பாளர் சமுக அபிவிருத்தி- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்- தகவலுக்காகவும்

Translated By- I. Aliyar